# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதி விசேஷமானது

අංක 2347/14 – 2023 අගෝස්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා – 2023.08.31

*2347/14 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**காலி மாநகர சபை**

களியாட்ட வரி

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், காலி மாவட்டத்தின் காலி மாநகர சபையிலே 2022.04.11 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 06(02) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் முன்மொழிவை தென் மாகாண ஆளுநர், டபிள்யூ. டபிள்யூ. கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (அதனுடன் தொடர்புள்ள ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (2) ஆவது உப பிரிவினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனுமதியளிக்கிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

**டபிள்யூ.டபிள்யூ. கமகே,**
ஆளுநர்,
தென் மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
காலி,
2023, ஓகத்து 16.

**முன்மொழிவு**

( 267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆவது உப பிரிவினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், காலி மாநகர சபையின், சபை நிர்வாக எல்லையினுள் அமைந்துள்ள பிரதேசங்களில் நடத்தப்படும் அக்கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு களியாட்ட நிகழ்வுக்காக (ஏற்புடைய


PG6467 – 07 (2023/08)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

களியாட்ட நிகழ்வு) செலுத்தப்படும் கொடுப்பனவைக் கீழ்காட்டப்பட்டவாறு வரியாக விதித்து அறிவிட வேண்டும் எனவும் இம் முன்மொழிவை வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அமுல்படுத்த வேண்டும் எனவும் முன்மொழியப்படுகிறது. அத்துடன் விதிக்கப்பட்ட களியாட்ட வரி அக்களியாட்ட நிகழ்வு இடம்பெறும் திகதிக்கு முன்னர் குறித்த ஏற்பாட்டாளர்களால் காலி மாநகர சபைக்கு உரியவாறு செலுத்த வேண்டும் எனவும் காலி மாநகர சபையால் மேலும் முன்மொழியப்படுகிறது.

| நிகழ்வு | களியாட்ட வரிச் சதவீதம் |
|---|---|
| 1. சர்வதேச கிரிக்கட் விளையாட்டுப் போட்டிகளுக்கு | 25% |
| 2. திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள திரையரங்குகளுக்கு | 15% |
| 3. சட்டத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைத் தவிர களியாட்ட வரி அறவிடப்படும் ஏனைய அனைத்து நிகழ்வுகளுக்கும் | 20% |

EOG 08 - 0296

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.